**அசல் வழக்கு எண். 276 /2021**

.வா..சா. **– 3 (சுப்பிரமணி)**

**நாள். 30.08.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ராஜம்மாளை 30 வருடங்களாக எனக்கு தெரியும். ராஜம்மாளுக்கு இரண்டு பையன்களும் ஒரு பெண்பிள்ளையும் உள்ளனர். ராஜம்மாள் மகளுக்கு திருமணமாகி விட்டது என்றால் சரிதான். ராஜம்மாளின் மூத்த மகனுக்கு சுமார் 17 ஆண்டுகளுக்கு திருமணம் ஆகிவிட்ட.து எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு என்று தெரியாது. கடைசி மகனுக்கு திருமணமாகி 7 ஆண்டுகள் ஆகிவிட்டது. ராஜம்மாள் தன்னை பராமரிக்க இயலாமல் இளைய மகனுடன் தங்கி ஜீவனம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. பொதுவாக கடன் கொடுக்கும் போது வீட்டின் அசல் பத்திரமோ, நிலத்தின் அசல் பத்திரமோ பெற்றுக் கொண்டுதான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான். நம்பிக்கையின் பேரிலும் கொடுப்பார்கள். வாதிக்கு சந்தனம்மாள் சம்பந்தி வேண்டும். சந்தனம்மாளுடன் பிரதிவாதி ஒரு கிரைய ஒப்பந்தம் கடனுக்காக செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தம் தொடர்பாக சந்தனம்மாள் பிரதிவாதி மீது திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.194/2021 என்ற வழக்கு போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதில் விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் தெரியாது. சந்தனம்மாளும் , நாகராஜ்ம் மோசடியாக ராஜம்மாளின் சொத்தை அடைவதற்காக போலியாக தாவா புரோநோட்டை உற்பத்தி செய்து இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. ரூ–20,00,000/– கடன் வாங்குவதற்கு பிரதிவாதி தகுதியான நபர் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் தெரியாது. ராஜம்மாள் எந்த காலத்திலும் எந்த வியாபாரமும் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில்

ராஜம்மாள் என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 6 வருட காலமாக வறட்சியினால் ராஜம்மாள் விவசாயம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு விவசாயம் செய்தற்கான ஆவணங்கள் ஏதேனும் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. நிரூபண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன். நிரூபண வாக்குமூலத்தில் " என்னையும் சடையாண்டி என்பவரையும் ராஜம்மாள் உடன் அழைத்து வந்தார் " என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜம்மாள் எங்கள் இருவரையும் எந்த தேதி, எத்தனை மணிக்கு, எந்த இடத்தில் வைத்து எங்களை பார்த்து அழைத்து வந்தார் என்ற விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் புரோநோட், ஸ்டாம்ப் ஆகியவற்றை எந்த தேதியில் வாங்கி வந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் ராஜம்மாள் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. புரோ நோட்டை என்னை ராஜம்மாள் எழுதச் சொன்னார் என்று நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு ராஜம்மாள் தாவா கடன் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சந்தனம்மாள், நாகராஜ் ஆகியோரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 30 ஆண்டுகளாக தெரியும். சந்தனம்மாள் எனக்கு தூரத்து உறவு வேண்டும். பக்கத்து தோட்டத்தில் வசித்து வருகிறார். என் முன்பாகவும், புரோநோட் சாட்சிகள் முன்பாகவும் ராஜம்மாள் வாதியிடம் புரோநோட் எழுதிக் கொடுத்து கடன் வாங்கினார் என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டை நான் சந்தனம்மாள் மற்றும் நாகராஜ் ஆகியோர் சொன்னதன் அடிப்படையில் செட்டியபட்டியில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சந்தனம்மாள் மற்றும் நாகராஜ் எனக்கு தூரத்து உறவினர்கள் மற்றும் பக்கத்து தோட்டத்துக்காரர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.09.03 19:32:36 +0530

Additional District Judge,

Dindigul.